**வேலூர் மாவட்டம்**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**ந.க. எண்.997/SMC/மாஒ6/ஒபக/2023, நாள் : 07.07.2023.**

**பொருள்** : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுவின் சிறப்புக் கூட்டம் – 14.07.2023_ல் நடத்துதல் – வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு.

**பார்வை** : சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1680/A11/பமேகு/ஒபக/2023, நாள்:05.07.2023.

*******

**பள்ளி மேலாண்மைக் குழு**

பார்வையில் காணும் சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்க பள்ளி மேலாண்மைக் குழுவின் கூட்டமானது மாதந்தோறும் அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் நடத்தப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து 2023-ஜுலை மாதம் நடைபெறவுள்ள பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தினை ஒரு சிறப்புக் கூட்டமாக அனைத்து **அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 14.07.2023 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 03:00 மணி முதல் 04:30 மணி வரை** நடத்திட அறிவுறுத்தப்படுகிறது.

**அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கான**
**பள்ளி மேலாண்மைக் குழுவின் கூட்டப் பொருள்**

**10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத, தேர்விற்கு வருகை புரியாத மற்றும் துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்காத மாணவர்கள் விரும்பும் வேலை வாய்ப்புகள் குறித்த படிப்புகளை அரசின் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்துப் படிக்க வழிகாட்டுதல் வழிமுறைகள்** பின்வருமாறு:

1. 14.07.2023 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறவிருக்கும் சிறப்புப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்வதை தலைமையாசிரியர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. பெற்றோர் செயலியில் கொடுக்கப்பட்டிருக்கும் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத, தேர்விற்கு வருகை புரியாத மற்றும் துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்காத மாணவர்களை பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடைபெறும்

**14.07.2023 வெள்ளிக்கிழமை** அன்று பள்ளிக்கு வரவழைக்க பள்ளிக் கல்வித்துறை சார்பில் கடிதம் மூலமாகவும், குரல்வழி செய்தி (Voice Blast) மூலமாகவும் மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்ற தகவலை தலைமையாசிரியர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், பள்ளி மேலாண்மைக்குழு கருத்தாளர்கள் (SMC RPs) மற்றும் தற்போது பள்ளியில் பயிலும் மாணவர்களின் துணையோடு பெற்றோர் செயலியில் கொடுக்கப்பட்டுள்ள மாணவர்கள் விவரங்களை இருப்பிட வாரியாக தொகுத்து அதன் அடிப்படையில் மாணவர்கள் மற்றும் அவர்தம் பெற்றோர்களை கூட்ட நாளன்று கூட்டத்தில் கலந்துகொள்ள அழைக்க வேண்டும்.

4. பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வருகைதரும் மாணவர்களுக்கு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கான வாய்ப்புகள், சலுகைகள் மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்துப் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர் எடுத்துக்கூற அறிவுறுத்தவேண்டும்.

5. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கான வாய்ப்புகள், சலுகைகள் மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த விவரங்கள் மாநில அலுவலகத்திலிருந்து காணொலி வடிவில் **இணைப்பு 3**_இல் பகிரப்பட்டுள்ளது.

6. கூட்டத்தில் பங்குகொள்ளாத மாணவர்களின் விவரங்களை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு கருத்தாளர்களிடம் (SMC RPs) கொடுத்து, மாணவர்களை நேரடியாக அவர்களின் இல்லத்தில் சந்தித்து தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதை தலைமையாசிரியர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

7. ஒருவார காலத்திற்குள் சம்பந்தப்பட்ட மாணவர்கள் இணைய வழியில் அவர்கள் விரும்பும் பாடப்பிரிவில் விண்ணப்பிக்க உதவ பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

8. கூட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்களின் விவரங்களை **இணைப்பு 1**_இல் உள்ள மாணவர் தகவல் படிவத்தில் பெறவேண்டும். மேலும், விண்ணப்பிக்கத் தேவையான **இணைப்பு 2**_இல் கேட்கப்பட்டுள்ள ஆவணங்களை மாணவர்களிடம் பெற்று, இரண்டு இணைப்புகளையும் தொகுத்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்திட பள்ளித் தலைமையாசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

9. பள்ளித் தலைமையாசிரியர்களிடமிருந்து இவ்வாறு பெறப்படும் மாணவர்களின் விவரங்களை தொகுத்து மாவட்டத் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் அரசுத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் அவர்களிடம் வழங்க வேண்டியுள்ளதால் (**10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத, தேர்விற்கு வருகை புரியாத மற்றும் துணைத் தேர்விற்கு**

விண்ணப்பிக்காத) மாணவர்கள் யாரும் விடுபடாமல் தொகுக்க தலைமையாசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**பிற வழிகாட்டுதல்கள்**

1. மாவட்டக் கள அலுவலர்கள், பள்ளி மேலாண்மைக் குழு கருத்தாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றிப் இச்சிறப்புக் கூட்டத்தில் பங்குகொள்ள வேண்டும்.

2. இச்சிறப்புக் கூட்டமானது மாணவர்களின் நலன் மற்றும் அவர்களின் உயர்கல்வி சார்ந்த மிக முக்கியமான கூட்டமாதலால் மாவட்டத் திட்ட அலுவலர் இதில் கூடுதல் கவனம் செலுத்திட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேற்காண் வழிகாட்டுதல்களைப் பின்பற்றிப் பள்ளி மேலாண்மைக் குழுவின் சிறப்புக் கூட்டமானது அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உரிய நேரத்தில் நடைபெறுவதை மாவட்டத் திட்ட அலுவலர் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் உறுதிசெய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இணைப்பு 1: மாணவர் தகவல் படிவம்**
**இணைப்பு 2: விண்ணப்பிக்க தேவைப்படும் ஆவணங்கள்**
**இணைப்பு 3: காணொலி QR Code**

07/07/23

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

07/07/2023

**பெறுநர்:**

1. அனைத்து அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொறுப்பு), வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டார வள மைய ஆசிரியப் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.
4. பள்ளி மேலாண்மைக் குழு கருத்தாளர்கள், வேலூர் மாவட்டம்.

**நகல்:**

1. சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.